**FsM**
Fachstelle Migration

Zeughausgasse 9
Postfach 1258
6301 Zug

Telephone 041 728 22 76
Fax 041 728 23 14
E-Mail welcome.desk@fsm-zug.ch
Internet: www.fsm-zug.ch

திகதி தபால்தலையில் உள்ளது

## Zug நகரத்தில் புதிதாக வசிப்பவர்களுக்கான அழைப்பிதழ்

நீங்கள் குறுகிய காலமாக Zug நகரத்தில் வசிக்கின்றீர்கள். தங்களை அன்புடன் இதயபூர்வமாக Zug நகரத்திற்கு வரவேற்கின்றோம் !

பல புதுவிடயங்கள், ஒழுங்கமைப்புகள் மற்றும் சுவிஸ் நாடும் மக்களும் சில வேளைகளில் தங்களுக்கு வேறுபட்டிருக்கலாம். எமது கொள்கை என்னவெனில் உங்களுக்குக் கஸ்டமான சூழ்நிலைகளில் தேவையான ஆலோசனைகளையும் உதவிகளையும் செய்து, நீங்கள் முழுமையாக இந்தப் புதுச்சூழலில் மகிழ்ச்சியினைக் காண உதவுவதேயாகும்.

எங்களுக்கு Kanton Zug இல் இருந்து தரப்புட்ட வேலையானது உங்களுக்கு பல தரப்பட்ட விடயங்களிலும் தகவல்களைத் தருவதேயாகும். எமது முதலாவது இலவசமான 15 நிமிட ஆலோசனை நேரத்தில் நீங்கள் Zug நகரத்தின் நாளாந்த வாழ்க்கையினைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம். சிலவேளைகளில் தங்களுக்கு மேலதிகமான தகவல்கள் தேவைப்படின், தனிப்பட்ட ஆலோசனைக்கான நேரத்தைக் கேட்டுப் பெறலாம். இந்த தொடர்ச்சியான ஆலோசனை நேரத்திற்கு வருடத்திற்கு CHF 10-. செலுத்தி உறுப்பினராக வேண்டும். இதன் மூலம் நீங்கள் கடிதங்கள்எழுதுதல், மொழி பெயர்ப்புகள்,விண்ணப்பங்கள் நிரப்புதல், வருமானவரி அறிக்கை நிரப்புதல் மற்றும் அரசாங்க அலுவலக அலுவல்கள் போன்றவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். எங்கள் மேலதிக சேவைகளுக்கான கட்டணப்பட்டியலைப் பார்க்கவும்.

எமது **வரவேற்பு மேசை** தினமும் மதியம் 13:30 – 16:00 மணிவரை குறுகிய ஆலோசனைகளுக்குத் திறந்திருக்கும். அல்லது தனிப்பட்ட ஆலோசனைக்கான நேரத்தை 041 728 22 76. என்ற தொலைபேசியில் இலக்கத்தில் தொடர்பு கொண்டு குறிக்கலாம்.

எமது இணையத்தள முகவரி www.fsm-zug.ch யில் பெரியஅளவிலான நாளாந்த வாழ்க்கைக்குத் தேவையான பல தகவல்களையும், அதற்கு தொடர்பு படுத்தும் இணையத்தள முகவரிகளின் தகவல்களையும், தங்கள் கேள்விகளுக்கான பதில்களையும் பெறலாம். கீழ் வரும் விடயங்களுக்கான தகவல்களைக் கடித மூலம் தாங்கள் விரும்பினால் அனுப்பி வைப்போம்:

| | | | |
|---|---|---|---|
| **தங்கும் நிலை** | **வேலை** | **சமூகக் காப்புறுதிகள்** | **ஆரோக்கியம்** |
| **வயதுவந்தோர் கல்வி** | **வேறு காப்புறுதிகள்** | **சமயம் கலாச்சாரம்** | **முகவரிகள்** |
| **குடும்பம்–பிள்ளைகள்** | **பாடசாலை** | **போக்குவரத்து** | **வதிவிடம்** |
| **பொழுதுபோக்கு விளையாட்டு** | **பொருளாதாரம்** | **வெளிநாட்டவருக்கான அலுவலகங்கள்** | |

நீங்கள் Zug நகரத்தில் வசிப்பதை விரும்புகின்றீர்கள் என்று நம்புகின்றோம். எமது அலுவலகத்தில் தங்களை வரவேற்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

| | |
|---|---|
| பெயர் / முதற்பெயர் | |
| முகவரி தொலைபேசி எண் இணையமுகவரி | |
| எந்த நாட்டவர் | |
| ஆலோசனைக்கு விரும்பும் மொழி | |
| தங்களுக்கு தகவல் தேவையான விடயங்கள் | |